**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.125/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.12** |
| **Name** | **:** | **டாக்டர். நாகூர்மீரான்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**1,2,4 முதல் 8 எதிரிகள் ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.06.2023.**

**முதல் விசாரணை -**

**நான் தற்போது சேலம் தனியார் மருத்துவமனையில் இருதய துறை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 28.7.2011 அன்று வந்தவாசி அரசு மருத்துவமனையில் இரவு 8.30 மணிக்கு பணியில் இருந்தபோது, திரு.செல்வராஜ், வயது 47 த/பெ. சின்னக்கண்ணு என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவரை விசாரித்தபோது அவர் தன்னை பத்து தெரிந்த நபர்கள் இரும்பு கம்பி, கத்தி ஆகியவற்றை கொண்டு கை, தலை, உடம்பில்**

தாக்கியதாக சொன்னவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது.

1) முன்னந்தலையில் 3 செ.மீ அளவில் ரத்த காயம் இருந்தது. ஒரு செ.மீ அளவில் வெட்டு காயம் இருந்தது. வலது கையிலும் தோள்பட்டையிலும் 5 செ.மீ அளவில் ரத்த காயம் இருந்தது. முதுகில் சிறிய ரத்த காயம் இருந்தது.

அதே சம்பவத்தில் தாக்கப்பட்டதாக அவருடைய மனைவி குமாரி என்பவர் சிகிச்சைக்கு வந்தவரை பரிசோதித்தபோது அவருக்கு வலது தோள்பட்டையில் 3 செ.மீ அளவில் ரத்த காயமும், இடது தோள்பட்டையில் 5 செ.மீ அளவில் ரத்தகாயமும், வலது பக்க தலையில் 4 செ.மீ அளவில் வெட்டுகாயமும் இருந்தது.

அதே சம்பவத்தில் தாக்கப்பட்டதாக லட்சுமிதேவி வயது 65 என்பவர் சிகிச்சைக்காக வந்தவரை பரிசோதித்தபோது, அவருக்கு வலது தோள்பட்டையில் 5 செ.மீ அளவில் ரத்த காயம் இருந்தது. இடது தோளபட்டையில் 3 செ.மீ அளவில் ரத்த காயமும், இடது கையில் ஒரு செ.மீ அளவில் வெட்டுக்காயமும், மார்பில் 5 செ.மீ அளவில் வீக்க காயமும் இருந்தது. மேற்படி மூன்று நபர்களுக்கும் வழங்கிய விபத்து பதிவேடுகள் முறையே அ.சா.ஆ.13 முதல் 15 வரையாகும்.

(சாட்சி ரத்த காயம் என்பது வீக்க காயம் என்பதை தான் ரத்த காயம் என்று சொன்னதாக சாட்சியம் அளித்தார். )

மேற்கண்ட மூன்று நபர்களையும் வந்தவாசி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்தேன். அதன்பிறகு மேற்கண்ட நபர்களின்

தொடர் சிகிச்சை என் பார்வைக்கு வரவில்லை.

<u>1,2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வீக்க காயங்கள் ஒரு நபர் கடினமான வழவழப்பான மேற்பரப்பு கொண்ட பொருள் மீது விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் உண்டு. வெட்டுகாயம் என்பது நீட்டிக்கொண்டிருக்கும் ஒரு பொருளின் முனை மீது படும்போது ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு.

செல்வராஜிற்கு இடது மண்டையிலோ, இடது நடுவிரலிலோ காயங்கள் எதுவும் விபத்து பதிவேட்டில் இல்லை என்றால் சரி தான். செல்வராஜிக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் தையல் போடவில்லை என்றால் சரி தான். செல்வராஜ் என்னிடம் சொல்லும்போது கொம்பால் காயம்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரி தான்.

குமாரி தனக்கு கட்டையாலோ, கம்பியாலோ அடிப்பட்டதாக என்னிடம் சொல்லவில்லை என்றால் இரும்பு கம்பியால் அடித்ததாக சொல்லியுள்ளார். லட்சுமிதேவி கொம்பால் தாக்கியதாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. லட்சுமிதேவிக்கு இடது கை உடைந்துவிட்டதாக விபத்து பதிவேட்டில் இல்லை என்றால் சரி தான்.

விபத்து பதிவேடுகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட நபர்கள் அவர்களாகவே சென்றுவிட்டார்கள் என்ற குறிப்பு உள்ளது. ஆனால் அவற்றை நான் எழுதவில்லை. காவல்நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. அப்போதே காவல் துறையினர் வந்துவிட்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

நடந்து வரும் தூரத்தில் தான் வந்தவாசி காவல்நிலையம் உள்ளது

**என்றால் சரி தான். நான் தகவல் கொடுத்தது வந்தவாசி காவல்நிலையம் தானா என்றால் வந்தவாசி காவல்நிலையம் தான்.**

**8ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.